தமிழ், தமிழர், தமிழக நலன்களைக் காக்க

# தி.மு.கழக கூட்டணியை ஆதரிப்பீர்!

## பழ.நெடுமாறன் வேண்டுகோள்!

தஞ்சாவூர், மார்ச் 27 -

வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு தமிழக மக்கள் ஆதரவு அளிக்கவேண்டும் என்றார் தமிழர் தேசிய முன்னணி நிறுவனர் தலைவர் பழ. நெடுமாறன். தஞ்சாவூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழர் தேசிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதற்கு முன் நடைபெற்ற தேர்தல்களைவிட வரும் சட்டப்பேரவைத் தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ் மொழி, தமிழர், தமிழக நலன்கள் ஆகியவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து செயல்படுவதை நோக்கமாகக் கொண்டு, ஹிந்தி, சம்ஸ்கிருத மொழிகளை தமிழ்நாட்டின் மீது திணிக்கவும், தமிழ்த் தேசியம் உள்பட மொழிவழி



தேசிய உணர்வுகளை அடக்கி ஒடுக்கவும் பா.ஜ.க. முற்படுகிறது. மேலும், இந்து மதவாத தேசியத்தைத் தூக்கிப் பிடிப்பதற்காக பா.ஜ.க. பல கட்சிகளைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டு களம் இறங்கியுள்ளது.

இந்தப் பேரபாயத்தை முறியடிக்க வேண்டியது தமிழர்களின் முதன்மையான கடமை. இந்தக் கடமையை முழுமையாக நிறைவேற்றும் நோக்கத்துடனும், ஜனநாயகக் கடமையை ஆற்றும் நோக்கத்துடனும் பா.ஜ.க. கூட்டணியை முறியடிக்கும் வகை யில் திமுக கூட்டணிக்கு ஆதரவ ளித்து வாக்களிக்க முன் வருமாறு தமிழக மக்களைக் கேட்டுக் கொள்கிறோம் என்றார் பழ.நெடுமாறன்.

தி.மு.கழகம் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள

# அய்யா பழ.நெடுமாறனுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 27 -**

**தி.மு.கழகம் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள அய்யா பழ. நெடுமாறன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கழகத் தலைவரும் முதல்வரு மான மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள அய்யா பழ. நெடுமாறன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மண், மொழி, மானம் காத்திட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள அய்யா பழ. நெடுமாறன் அவர்களுக்கு நன்றி!

தமிழுணர்வை நெஞ்சில் ஏந்திக் களமாடுவோம்; தமிழ்நாட்டைச் சூழும் பேராபத்தை முறியடித்து வாகை சூடுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

பிரச்சினையை திசை திருப்ப தொகுதி மறுவரையறையை கையிலெடுத்துள்ளது!

# எரிவாயு தட்டுப்பாடு : ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன செய்கிறது?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, மார்ச். 27 -**

**எரிவாயு தட்டுப்பாடு பிரச்சினையை திசை திருப்ப தொகுதி மறுவரையறையை கையிலெடுத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பார்த்து, இத்தனைக்கும் பொறுப்பான நிலையில் என்ன செய்கிறது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகிறார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“கோவிட் காலத்தைப் போல



என பிரதமர் அவர்கள் பேசியதால், ஏற்கெனவே எரிவாயு தட்டுப்பாட்டால் தவிக்கும் மக்கள் மேலும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தீவிர நடவடிக்கைகள் மூலம் இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய ஒன்றிய பா.ஜ.க. அரசு இதில் இருந்துசெய்திகளைத்திசைதிருப்புவதற்காகவே தொகுதி மறுவரையறை scriptஐத் தற்போது கையிலெடுத்துள்ளது.

பா.ஜ.க. ஜாடிக்கு ஏற்ற மூடியாக, மக்கள் பிரச்சினைகளை மறந்தும் பேசமாட்டோம் எனத் தங்களுக்குத் தாங்களே வாய்ப்பூட்டு போட்டுக் கொண்டுள்ள அ.தி.மு.க.வோ, மாநில அரசு என்ன செய்கிறது







எனக் கேட்கிறார்கள்.

சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது?

மாநில அரசு தன்னால் இயன்ற அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. “இத்தனைக்கும் பொறுப்பான ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன செய்கிறது?”




என்பதே மக்கள் முன்வைக்கும் கேள்வி...

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் மின் வாகன உதிரிபாகங்களின் உற்பத்தியை அதிகரிக்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!

*புதுடெல்லி, மார்ச். 27 -*

*தமிழ்நாட்டில் மின் வாகனங்களுக்கான மின் சக்தி பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து அதனை வணிக பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காகவும் EV பவர் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி பொருட்களுக்கான பாதுகாப்பு வசதி களை நிறுவு வதற்காகவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று மக்களவையில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரு மான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.*



*அதன் விவரங்கள் பின்வருமாறு:-*

*சென்னையில் அறிமுகப் படுத்தப்பட்ட, மின்வாகனங்க ளில் ஒருங்கிணைந்த இயக்க சக்தியினை கொடுக்கும் (Integrated Drive System) அதிகமான வெப்பநிலையிலும் சீராக செயல்படும் திறன் கொண்ட 30 கிலோ வாட் வைட் பேண்ட் கேப் உற்பத்தியை அதிகரிக்கவும் அதனை வணிக ரீதியிலான பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குமான செயல் திட்டத்தை ஒன்றிய அரசு வகுத்துள்ளதா?*

*அப்படியெனில் இந்தத் திட்டத்திற்காக மின்சக்தி மின்னணுவியல் தொழில் நுட்பத்திற்கான தேசிய இயக்கத்தின் கீழ் (NaMPET) ஐஐடி மெட்ராஸ் மற்றும் CDAC எனப்படும் மத்திய உயர்கணிணி மேம்பாட்டு மையம் உள்ளிட்டவற்றுக்கு வழங்கப்பட்ட நிதி குறித்த விவரங்கள் என்ன?*

*தமிழ்நாட்டின் வாகன உதிரிபாகங்களுக்கான வலுவான தானியங்கி தயாரிப்பு நிறுவனங்கள் உள்ள தால், மின்னணுவியல் உற்பத்தி பொருட்களுக்கான பாதுகாப்பு வசதி கொண்ட தொழில் பூங்காக்களை நிறுவ திட்ட மிடப்பட்டுள்ளதா? திட்ட மிருப்பின் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) இத்தொழில்நுட்பத்தால் பயனடைவதற்கு ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?*

*மேலும் தமிழ்நாட்டில் உள்ளூர் EV பவர் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியை அதிகரித்து, முக்கிய உதிரிபாகங்களுக்கான இறக்குமதி சார்புநிலையை குறைக்கும் வகையில், ஊக்கத்தொகைகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மானியங்கள் அல்லது உள்கட்டமைப்பு வசதிகளை வழங்க ஒன்றிய அரசு முன்வருமா?*

*இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.*



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் தி,மு,க, சட்டத்துறை சார்பில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணிகளுக்காக பாப்பிரெட்டிப்பட்டி மாவட்டக் கழக செயலாளர் முகாம் அலுவலகத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி.சந்திரசேகரன் முன்னிலையில், தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர்,முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் வார் ரூம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் வேட்பாளர் வழக்கறிஞர் கதிரவன் மற்றும் கழக வழக்கறிஞர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகளைக் கேட்காமல்

# திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 27 -**

**“யாருடைய உரிமைகளை வாழ்வைப் பாதிக்கிறதோ அவர்களது கருத்துகளையே கேட்காமல் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது என்று வலியுறுத்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

யாருடைய உரிமைகளை, வாழ்வைப் பாதிக்கிறதோ, அவர்களது கருத்துகளையே கேட்காமல் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது.

திருநர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என இயற்றப்பட்டுள்ள சட்டத்தைத் திருநர் சமுதாயத்தினரே எதிர்க்கிறார்கள் என்றால், அது ஏன் என்று ஆராய வேண்டுமே ஒழிய, அதனைத் திணிக்கக் கூடாது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு இம்முயற்சியை நிறுத்தி, திருநர்களுடன் கலந்தாலோசித்து, அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் திருநர்களின் உண்மையான இசைவைப் பெற முயல வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட

# நோயாளிகளின் பாதுகாப்பிற்கு அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

*புதுடெல்லி, மார்ச் 27 -*

*திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 24 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உரிமையைப் பாதுகாக்க, ஒன்றிய அரசிடம் ஏதேனும் நடவடிக்கைகள் உள்ளனவா? என்றும் அதற்கான சுகாதார கட்டமைப்புகளை பலப்படுத்த முன்முயற்சிகள் எடுக்கப் படுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.*

*இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணைய*



*மைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:*

*ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்ற தேவையான தொழில்நுட்ப உதவிகளையும், நிதி உதவிகளையும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது என்றும், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறியும் ஆஷா என்ற அமைப்பின் உதவியுடன் அவர்களுக்கான கண்காணிப்பும் மருத்து வசதிகளையும் மாநில அரசின் உதவியுடன் அளிக்கப்படுகிறது என்றும், சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் கடந்த 2017ம் ஆண்டு முதலாக நடத்தப்பட்டு வருகின்றன என்றும், ஆயூஷ்மான் ஆரோக்ய மந்திர் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடு;த்து வருகிறது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.*

*மேலும் திறன் மேம்பாட்டு திட்டங்களும், பயிற்சி வகுப்புகளின் மூலமும், மருத்துவ துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றும், தொழுநோயை கண்டறியவும், அவர்களுக்கு தேவையான மருத்து உதவிகளை உரிய நேரத்தில் வழங்கிடவும் தேவையான முயற்சிகளை ஒன்றிய அரசு மாநில ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து மாவட்ட அளவில் அனைத்து நடவடிக்கைகளையும் தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து மேற்கொண்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.*